Int. J. Adv. Multidiscip. Res. (2020). 7(8): 65-69

International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
DOI: 10.22192/ijamr Volume 7, Issue 8 -2020

ஆராய்ச்சிக் கட்டுரை

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2020.07.08.010

# சங்க அகப் பாடல்களும் ஃப்ராய்டிய உளப்பகுப்பாய்வும்

**இரா. ஏழுமலை**
தமிழ்த்துறைத்தலைவர்
இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி
தெள்ளாறு– 604 406, திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா

முக்கியச் சொற்கள்

ID = தலைவி
Ego = தோழி
Super Ego = தாய்

## ஆய்வுச் சுருக்கம்

பண்பாடு, சமயம், சமூகம், தனிமனிதன், படைப்பாக்கம் என்பன பற்றிக் காலங்காலமாகக் கூறப்பட்டு வந்த கருத்தாக்கங்களின் மீது. ஃப்ராய்டின் கோட்பாடுகள் புதிய விளக்கங்களைத் தந்தன. அத்தகைய விளக்கங்களால் தாக்கம் பெற்று பல்வேறு துறை அறிஞர்களும் ஃப்ராய்டின் தத்துவங்களைத் தொடர்ந்து விவாதிக்கவும், ஏற்கவும், மறுக்கவும் செய்தனர் இன்றளவிலும் கூட அவரது கோட்பாடுகள் மேற்கண்ட நிலைப்பாடுகளில் வளர்ந்து வரவும் செய்கின்றன.

## சங்க அக இலக்கிய மரபு

சங்க அக இலக்கிய மரபு ஒத்த அன்புடன் உள்ளப் புணர்ச்சியில் ஈடுபட்ட தலைவன் தலைவியின் காதல் ஒழுக்கங்களை அகன் ஐந்திணையாகப் பாடியது. மேலும், இப்பாடல்கள் உலக வழக்கு, இலக்கிய வழக்கு ஆகிய நடைமுறைகளோடு பாடப்பெற்றவை. அகன் ஐந்திணைப் பகுப்பு என்பது சங்க கால மக்களின் வாழக்கை முறையோடும் தலைவன் தலைவியர்க்கிடையே உள்ள உள்ளப் போராட்டங்களோடும் தொடர்புடையதாக உள்ளது. சங்க அகப்பாடல்களுக்கு உரிய மரபுகள் தொடர்ந்து தமிழ்ச் சூழலின் ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னுடைய செல்வாக்கைச் செலுத்தி வந்துள்ளது. தலைவன் தலைவியின் பெயர் சுட்டா மரபமைந்த அகப்பாடல்கள் படிக்கின்ற, உரை எழுதுகின்ற ஒவ்வொருவருடைய உணர்வுகளிலும் ஆட்சி செலுத்தி வந்துள்ளன.

இச்செல்வாக்கு பின்வந்த பக்தி இலக்கியத்தையும் பற்றியது. சமண பௌத்த சமயங்களால் நலிவுற்ற வைதீகச் சமயங்கள் உலகியல் காதலை பாடுபொருளாகக் கொள்ளவில்லை. அவர்களின் பாடுபொருள் என்பது இறை அனுபவம், பேரின்பம் அல்லது இறைவனின் திருவடிகளைச் சேர்தல் என்பதாக அமைந்தது. இவ்வாறு இறைவனை அடைய பாடுகின்ற பாடலில் சங்க அக மரபைப் புகுத்தினர். சங்க காலத்துத் தலைவன் தலைவியின் உயர்ந்த காதல் ஒழுகலாறுகளில் தோய்ந்த புலவர்கள் அல்லது அடியவர்கள் இறை உணர்வைப் பாடும்போதும் அகப்பாடல் மரபுகளைப் பின்பற்றியுள்ளார்கள். ஆக, சங்க அகப்பாடல் மரபைத் தொடர்ந்து தமிழிலக்கியங்களில் காணமுடிகிறது. இம்மரபு தொடர்ந்து பயன்படுத்தப்படுவதற்கும், விரும்பப்படுவதற்கும் உள்ள உளவியல் காரணங்களை மேலும், இக்கட்டுரை ஆராய்கிறது.

## படைப்பின் உளவியல் செயல்பாடுகள்

மன வளர்ச்சிப் படிநிலைகளில் ஆராய்ச்சி மேற்கொண்ட ∴ப்ராய்டு, கனவுகளை ஆராய்ந்தார். அவ்வாறு கனவுகளைப் பற்றி ஆராயும் போது, மனத்தின் இயங்கு தன்மை குறித்த ஆய்வில் மனமானது செயல்படும் விதத்தைப் பொறுத்து 1.நனவு மனம், 2.நனவடங்கு மனம், 3.நனவிலி மனம் என்ற மூன்று வகையான மனப்பகுதிகளை விளக்கினார். நனவு மனம், தான் என்ன செய்கிறோம் என்பதை உணரக் கூடிய வகையில் அமைந்துள்ள மனம். ஆனால், மனிதனின் நனவிலி மனத்துள் அவனறியா பல விருப்பங்களும், இச்சை உணர்ச்சிகளும் அமுங்கிக் கிடக்கின்றன எனக் கண்டறிந்தார்[1]. நனவிலி மனத்துள் புதைந்து கிடக்கின்ற இச்சை உணர்ச்சிகள் நனவடங்கு மனம் கடந்து நனவு மனத்தின் வழியாக வெளிப்படும் பொழுது, உண்மையான கோலத்தோடு வெளிப்படாமல் முறை மாறியும் வேறுபட்டும் பல வித புனை வேடங்களைப் புனைந்து மனித நடத்தைகளாக மலர்கின்றன. மனிதன் காணுகின்ற கனவுகள் விவரிப்பதற்கு இயலாதனவாக உள்ளன. ஆகவே, கனவுகள் நனவிலி மனத்தின் செயற்பாடுகள் எனவும் கண்டறிந்தார்.

∴ப்ராய்டு கனவைப் பற்றி ஆராய்ந்த இவ்வுண்மைகள் கலை இலக்கியங்களிலும் வெளிப்படுவதை அறிந்தார். அவ்வகையில், கனவுத் தொழிற்பாடும், படைப்பாளியின் படைப்பும் ஒத்திருப்பதைக் கண்டார். அமுக்கப்பட்ட நனவிலி வேட்கைகள் கனவுகளில் பலவித புனைவு வேடங்களைக் கொண்டு வெளிப்படுவதைப் போன்றே படைப்பாளியின் நனவிலி அதிர்வுகள் படைப்புகளில் வெளிப்படுகின்றன எனக் கண்டறிந்தார்[2]. கனவுகள் நனவிலியின் வேட்கைத் தீர்வுகள் அல்லது நனவிலி வேட்கையின் குறியீட்டு மொழியாக்கமாகும். அது போன்றே கலை இலக்கியங்களும் படைப்பாளியின் நனவிலி வேட்கை வெளிப்பாடுகளே ஆகும். நனவிலியில் அமுங்கிக் கிடந்து வெளிவரத் துடிக்கும் இச்சை உணர்ச்சிகள் படைப்பிலும் வெளிப்படுகின்றன. கனவுகள் மனிதன் உறங்கும்போது, அவனறியாமல் உருவாகின்றன. படைப்பாக்கமும் படைப்பாளியின் நனவிலி வேட்கைகளும் அவனறியாமல் படைப்பின் வழி வெளிப்படுகின்றன. நனவிலியின் உண்மையான இச்சை உணர்வுகள் கனவுகளில் மூடி மறைந்து பல்வேறு உருமாற்றங்களைக் கொண்டு மாறி வெளிப்படுவதைப் போன்றே படைப்பாளியின் நனவிலி வேட்கைகள் படைப்பாக்கமாக மூடி மறைந்து வெளிப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, கனவுச் செயலின் உளத் தொழில் நுட்பங்களான உறைவு, இடப்பெயர்வு, குறியீட்டாக்கம், அமுக்கம், நனவிலி வேட்கையின் மறு தொழிற்பாடு முதலான கூறுகள் படைப்பிலும் வெளிப்படுகின்றன. இதனாலேயே படைப்பைப் பகற்கனவு என்றும் படைப்பாளனைப் பகற்கனவாளன் என்றும் அறிவிக்கிறார் ∴பராய்டு.

## படைப்பின் மூவகை மனச்செயற்பாடுகள்

மனவளர்ச்சிப் படிநிலைகளில் தடை ஏற்படுவதற்கும் பண்பாட்டுக் கட்டுப்பாடுகளே காரணமாகின்றன. மனிதன் தன்னுடைய இயற்கையான விருப்பத்தை உள்ளவாறே வெளிப்படுத்த விழைகின்றான். பண்பாட்டுக்கு ஒவ்வாதன எனக் கருதப்படும் இச்சையைப் பண்பாடு கட்டுப்படுத்துகிறது. மனிதனுக்குள் இருக்கும் இச்சை உணர்ச்சியும் வெளி உலகத்திலிருந்து திணிக்கப்படும் பண்பாட்டுக் கட்டமைப்பும் மனித உள்ளத்தில் செயல்படும் நிலைகளை வைத்து மனித மனத்தை ∴ப்ராய்டு மூன்று நிலைகளில் விளக்கினார்.

1. இச்சை நிறைவேற்ற விழைவு (ID)
2. தன்முனைப்பு (Ego)
3. பண்பாட்டு உணர்ச்சி (Super Ego)

மனிதனின் இச்சை நிறவேற்ற உணர்வு வெளிப்பட முனையும் போது, பண்பாட்டு உணர்ச்சி அதனை அடக்க முயலுதலும் நிகழ்கின்றது. இந்நிலையில் தன் முனைப்பு என்பது, இவற்றைக் கண்காணித்து இச்சை உணர்ச்சியில் மனிதனுடைய ஆளுமைக்கு அழிவு ஏற்படா வண்ணம் பாதுகாக்கிறது.

## சங்க கால அக மரபில் காதல்

சங்க கால அகமரபில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுபவர்கள் தலைவி, தோழி, தாய், தலைவன் என்ற நால்வர் ஆவர். இந்த நால்வர் என்பது புலவனின் பன்முகப் பரிமானப் பாத்திரங்கள் ஆகும். புலவர்கள் மன்னர்களை மகிழச் செய்து பொருள் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு பாடியிருப்பினும் அப்பாடல்களில் தங்களின் சொந்த மன விருப்பத்தையும் அவர்கள் அறியாமலேயே பதிவு செய்துள்ளனர். புலவர்கள் தலைவன் தலைவி உத்தி முறையைப் பயன்படுத்தி உலகோர் அனைவருக்கும் புலப்படுத்திக் காட்டத் தன்னைத்

தலைவியாக மட்டும் பாவித்துக் கொண்டு தலைவி கூற்றமைந்த பாடல்களைப் பாடியிருக்கலாம். அவ்வாறு அல்லாமல் தலைவியின் காதல், தோழியாலும், செவிலியாலும் பேசப்படுகிறது. இதற்கான உளவியல் காரணத்தை ஆராய்வது இன்றியமையாததாகும்.

ஒரு படைப்பாளன் தன்னுடைய தலைவி வேட்கைகளை ஒரே பாத்திரத்துள் படைக்காமல் பல்வேறு பாத்திரங்களின் வாயிலாகச் சொல்வதுண்டு. அவ்வகையில் தான் புலவரின் நனவலி மன்னனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் எண்ணி பாடல் புனைந்துள்ளது. அதாவது, மன்னன் விரும்பத் தகுந்த பெண்ணாகத் தன்னைப் புனைந்துகொள்கிறது. இவ்வாறு புலவரின் நனவிலி தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கொள்வதில் உள்ள நனவிலிச் செயல்பாடுகள் தான் தலைவி நிலையில் மூன்று பாத்திரங்களை உருவாக்குகிறது.

உலக நிலையில் பொருந்தாத காதல் தான் தலைவியின் காதலாகும். அந்தக் காதலின் ஏக்கங்களைத் தலைவி வெளிப்படையாகவே ஆற்றாமைக்கு உரிய ஒன்றாகப் பேசுகிறாள். தலைவியின் காதலைப் பெற்றோர்க்கு எடுத்துக் கூறி அதை நிறைவேற்றுபவளாகத் தோழி பேசுகிறாள். தலைவியின் காதலை எண்ணித்தாய் வருந்துபவளாக இருக்கிறாள். இந்த மூன்று பாத்திரங்களும் மூன்று விதமான தன்மையுடன் தலைவியின் காதலை அணுகுகின்றன.

தலைவி தானே தன் காமத்தை வெளிப்படுத்துதல், தோழி, தலைவியின் காமத்தை நிறைவேற்ற முயலுதல், தாய் தலைவியின் காதலை எண்ணி வருந்துதல் ஆகிய மூன்று அடிப்படைகளே சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. சங்க அக மரபில் தலைவியின் குரல் புலவரின் நனவிலிக் குரலே எனக் கொண்டால் தலைவி காமத்தை முன் வைத்துப் பேசும் தோழி, தாயின் கூற்றுகளும் புலவரின் நனவிலி குரல்களே எனலாம்.

1. காமத்தை ஒருத்தி தானே செயற்படுத்துகிறாள்.
2. ஒருத்தி நிறைவேற்றி வைக்க உதவுகிறாள்
3. ஒருத்தி அத்தகைய காமம் குறித்து வருந்துகிறாள்.

என்று தலைவி, தோழி, தாயின் கூற்றுகளை வகைப்படுத்தலாம்.

இவ்வாறு புனைந்து கொள்ளும் போது, ஒவ்வொரு மனித மனத்துள்ளும் செயல்படும் இச்சை உணர்ச்சி விழைவு (ID) தன்முனைப்பு (Ego), பண்பாட்டு உணர்வு (Super Ego) என்பன புலவரின் படைப்பு உத்தியிலும் செயல்பட்டுள்ளன என விளங்கிக் கொள்ளலாம். தலைவி பாடல்கள் புலவரின் இச்சை நிறைவேற்ற விழைவு வெளிப்பாடு என்றும், தாய் பாடல்கள் பண்பாட்டு உணர்வின் வெளிப்பாடு என்றும், தோழிப்பாடல்கள் புலவரின் தன்முனைப்பு உணர்வின் வெளிப்பாடு எனவும் கொள்ளுதல் பொருந்தும்.

## தலைவி (இச்சை நிறைவேற்ற விழைவு)

புலவர்கள் பாடும் தலைவி கூற்றமைந்த பாடல்கள் மிக்க காமத்தின் பாற்பட்டவை. தலைவன் மீது கொண்ட அளவிறந்த காதலால் புலம்புதல், வருந்துதல், தலைவனை அடைய இயலாத நிலையில் தலைவனின் உருவ அழகையும், அவனுடைய செயல்களையும் நினைந்து பாடுவதாகப் பாடல்கள் உள்ளன. தலைவியின் ஆற்றாமை இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. எடுத்துக்காட்டாக, சங்கப்பாடலொன்றில்,

முன்பனிக்காலம் வந்துவிட்டது. பிரிந்துசென்ற தலைவன் இன்னும் வரவில்லை. ஆகவே, தலைவி, மிகவும் வருத்தத்தோடு இருக்கிறாள். அப்பொழுது, தலைவியின் தோழி அங்கே வருகிறாள். தலைவி, முன்பனிக்காலமும் வந்துவிட்டது. ஆனால், இன்னும் அவர் வரவில்லை. என்னுடைய வருத்தத்தைத் தீர்க்கும் மருந்து என் தலைவனின் மார்புதான் என்று வருந்துகிறாள். தன் காம வேட்கையைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறாள்.

பூழ்க்கா லன்ன செங்கால் உழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையினங் கவரும்
அரும்பனி அற்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே[3].

இப்பாடலில், பண்பாட்டிற்கும் அதன் ஒடுக்கு முறைக்கும் கட்டுப்படாத தலைவியின் காமம் தலைவனை அடைவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. தான் அடைய விரும்பியதை அடையத் துடிக்கும் பண்பாடு கொண்டது ‘இட்’ எனப்படுகிறது. மனித மனத்தின் இச்சை நிறைவேற்ற விழைவு பண்பாட்டைக் கருத்தில் கொள்ளாதது போலவே தலைவியின் காதலும் பண்பாட்டைக் கருத்தில் கொள்ளவில்லை.

அவ்வாறான நிறைவேற்றத்தின் போது செயல்படும் படைப்பாளனின் இச்சை நிறைவேற்ற விழைவு, தான் படைத்த தலைவியின் காமத்தைப் பண்பாட்டுக் கட்டுகளை மீறியதாகப் படைத்து விடுகிறது என்பது பாடல் வழி தெளிவாகிறது.

## தாய் (பண்பாட்டு உணர்ச்சி விழைவு)

புலவர்கள் படைத்த தலைவி, புலவரின் நனவிலி மனத்தில் புதைந்திருக்கும் இச்சை நிறைவேற்ற விழைவினால் விளைந்த ஒரு படைப்பு என விளக்கப்பட்டது. புலவர்களின் படைப்பான தாயானவள் தன் மகளின் காதல் தனக்கு வருத்தம் தரக்கூடியதாக உள்ளது என்கிறாள். தன்னையும், தன் சுற்றத்தாரையும் மறந்து மகள் தன் நாயகனைத் தேடிச் சென்று விட்டாள் என்கிறாள். தலைவியின் காதல் செய்கையை ஊரார் தூற்றுவரோ என்று தாய் அஞ்சுகிறாள். தாயின் இந்த ஐயங்களும் வருத்தமும் பண்பாட்டு உணர்ச்சியின்வெளிப்பாடுகள் ஆகும்.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே[4].

இப்பாடலில் தலைவி தலைவனுடன் சென்றுவிட்டாள். அவளைத் தேடிச் சென்ற செவிலித்தாய் ஓடி ஓடிக் கால்கள் ஓய்ந்தன. பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துப் போயின. இந்த உலகில் வானத்து மீன்களைக் காட்டிலும் பலர் உள்ளனர். எனக்கு மட்டும் இந்த நிலை ஏன் வரவேண்டும் என தலைவியின் செயலைக் கண்டு வருந்துபவளாகவும் ஊரார் பழி தூற்றுவர் என அஞ்சுபவளாகவும் காட்டப்பெறுகிறாள்.

இச்சை நிறைவேற்ற விழைவு தவறானது எனப் பண்பாட்டு உணர்வு தடுக்கும் நிலையில் தாய் தன் மகளின் காதலை ஊரார் தூற்றுவர் என்கிறாள். இங்கு ஊரார் தூற்றுவது, பண்பாட்டுக்கு ஒவ்வாதது என்பன ஒரே பொருளின் பாற்பட்டவை. தாயின் கூற்றில் வெளிப்படும் புலவரின் பண்பாட்டு உணர்வின் ஆதிக்கம் தான் தாய் கூற்றுப் பாடலைப் புனைகிறது.

## தோழி (தன்முனைப்பு மனோபாவ விழைவு)

புலவர்கள் படைத்துள்ள தலைவி, நனவிலி மனத்தின் இச்சை நிறைவேற்ற உணர்ச்சியின் வெளிப்பாடு என்றும், தாய் அதனை அடக்க முயலும் பண்பாட்டு உணர்ச்சியின் வெளிப்பாடு என்றும் விளக்கப்பட்டது. தோழி என்ற பாத்திரப் படைப்பு நனவிலியில் இருக்கும் தன் முனைப்பின் வெளிப்பாடாகவே இருக்கும் என முடிவு செய்வதில் அவ்வளவு சிக்கல் இல்லை. என்றாலும் தோழி என்ற பாத்திரம் எவ்வாறு தன் முனைப்பு உணர்ச்சியின் வெளிப்பாடு என விளக்க முனைவது அவசியமாகும்.

சங்க காலப் பாடல்களில் தோழி தலைவியின் காமத்தை நிறைவேற்றி வைப்பவளாகச் செயல்படுகிறாள். தோழியின் கூற்றைமைந்த பாடல்களில் தலைவியின் பெற்றோரிடத்துத் தெரிவிக்கும் பொருட்டு அறத்தொடு நிற்றல், தலைவியின் காம நோயை எடுத்துக் காட்டி பெற்றோர் நிகழ்த்த நினைக்கும் வெறியாட்டு விலக்குதல் போன்ற செயல்களைச் செய்கிறாள். தலைவியின் காதல் நியாயமானதே, நீங்கள் நினைக்கும்படி அவளுடைய நோய்க்கு வெறியாட்டு மருந்தன்று, அவள் தலைவனோடு கலத்தலே மருந்து என்று தோழி தலைவியின் தாயிடம் கூறுகிறாள். இது அறத்தொடு நின்று தலைவியின் காதலை ஏற்றுக் கொள்ளச் செய்யும் தன்முனைப்பு விழைவுச் செயலாகும்

ஓங்கல் வெற்ப
ஒருநாள் விழுமம் உறினும், வழிநாள்
வாழ்குவள் அல்லள்என் தோழி...
கொடுந்தேன் இழைத்த கோடுஉயர் நெடுவரை
பழம்தூங்கு நளிப்பின் காந்தள்அம் பொதும்பில்
பகல்நீ வரினும் புணர்குவை[5]...

“உயர்ந்த மலைநாடனே ! இரவில் வரும் உனக்கு ஒருநாள் துன்பம் நேர்ந்தாலும் என்தோழி மறுநாள் உயிர்வாழ மாட்டாள். வளைந்த தேன்கூடுகள் கட்டப்பட்டுள்ள உயர்ந்த மலைச்சாரல் எம் ஊர். அம்மலைச் சாரலில் பழங்கள் பழுத்துத் தொங்கும் மரச்செறிவில் உள்ளது காந்தள் புதர். அப்புதரில் நீ பகற்காலத்தில் வந்தால் தலைவியைக் கூடலாம்.” எனத் தோழி கூறுகிறாள்.

இப்பாடலில் தோழி தலைவியின் விருப்பத்தினை நிறைவேற்றித் தருபவளாக அமைகிறாள். இது இச்சை உணர்ச்சியை அடைய விரும்பும் நனவிலியின் விருப்பமாகும். அவ்விருப்பத்தினை நிறைவேற்றும் நனவடங்கு மனத்தின் செயற்பாடு தோழியின் செயற்பாடோடு ஒத்துள்ளது. ஆகவே, தோழி தன்முனைப்பு மனோபாவ விழைவு எனலாம்.

## முடிவுரை

பாடுகின்ற புலவனின் மன விருப்பங்களே படைப்புகளில் வெளிப்படுகின்றன என்பதும் அது பலவித புனைவு வேடங்களைக் கொண்டு வெளிப்படுகின்றன என்பதும் தலைவி, தோழி, தாய் என்ற கலைப்படைப்புகளின் வழி அறியமுடிகிறது. ஃப்ராய்டின் கோட்பாட்டுப்படி எந்தவொரு படைப்பும் நனவிலி மனத்தின் செயற்பாடு என்பது மேற்கண்ட செய்திகளின் வழி அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. Sigmund Freud, Interpretation of Dreams - 1901, Page - 1
2. Sigmund Freud, Interpretation of Dreams - 1901, Page - 2
3. குறுந்தொகை பாடல் - 3
4. குறுந்தொகை பாடல் - 4
5. அகநானூறு பாடல் - 5


| Access this Article in Online | |
|---|---|
| | Website: www.ijarm.com |
| Quick Response Code | Subject: Tamil |
| DOI:10.22192/ijamr.2020.07.08.010 | |

How to cite this article:
இரா. ஏழுமலை. (2020). சங்க அகப் பாடல்களும் ஃப்ராய்டிய உளப்பகுப்பாய்வும். Int. J. Adv. Multidiscip. Res. 7(8): 65-69XX.
DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2020.07.08.010